செ.வெ.எண். 70/பிப்ரவரி தேதி : 27.02.2017

# தருமபுரி மாவட்டம்
# குடிநீர் விநியோகம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.



தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் கூடுதல் கூட்டரங்கில் குடிநீர் விநியோகம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததினால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. ஒகேனக்கல் கூட்டு குடிநீர் வழங்குவதன் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள எட்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் குடிநீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படும் பகுதிகள் கண்டறியப்பட்டு, உடனுக்குடன் குறைகள் கண்டறியப்பட்டு மோட்டார் பழுதுகள் சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்து வருகிறார்கள்.

எட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் பற்றாக்குறையினை போக்க 2016-17ம் ஆண்டில் பொது நிதி மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியிலிருந்து 246 குடிநீர் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேலும் கடந்த ஆண்டுகளில் மாவட்டத்தில் பல திட்டங்களின் மூலம் குடிநீர் பணிகளை சரி செய்ய நிர்வாகம் அனுமதி வழங்கப்பட்டு நிலுவையில் உள்ள குடிநீர் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதுபோல நடப்பாண்டிலும் குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு தனி அலுவலர்களை நியமித்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கண்காணித்து வருகிறது. மேலும் பொதுமக்கள் குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒகேனக்கல் குடிநீரை குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். வேறு பணிகள் குளிப்பது, துவைப்பது போன்றவற்றிற்கு பயன்படுத்தக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய நிலவரப்படி, ஒகேனக்கல்லில் நீர்வரத்து குறைவாக உள்ளதால், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து வழங்கப்படும் குடிநீரை சிக்கனமாகவும், குடிநீருக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். ஒகேனக்கல் குடிநீரை வீணாக்குபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்ட குழாய்களை சேதப்படுத்துவோர் மற்றும் மின் மோட்டார் மூலம் நீர் உறிஞ்சுவோர்களை கண்டறியப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தமிழ்நாடு பொது சொத்துக்கள் சேதப்படுத்துவதை தடுக்கும் சட்டத்தின் (TNPPD Act) மூலம் தண்டிக்கப்படுவீர் என்பதையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம். காளிதாசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

திரு. இரா. சண்முகசுந்தரம், மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி. விமலாதேவி, உதவி இயக்குநர் (தணிக்கை) திரு. பழனிசாமி, நகராட்சி ஆணையர் (பொ) திரு. குணாளன் மற்றும் துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.